# நன்றி கெட்ட மான்

ஒரு காட்டில் மான் ஒன்று மேய்ந்து கொண்டு இருந்தது. அங்கே வந்த இரண்டு வேடர்கள், அந்த மானைப் பிடிப்பதற்காக அதை விரட்டினார்கள். அந்த வேடர்களிடம் இருந்து தப்பிப்பதற்காக மான் வேகமாக ஓடியது. வேகமாக ஓடிய மான், காட்டிற்கு அருகில் இருந்த ஒரு திராட்சைத் தோட்டத்துக்குள் புகுந்து விட்டது. வேடர்களும் மானைத் துரத்திக் கொண்டே திராட்சைத் தோட்டத்துக்குள் புகுந்தார்கள்.

மான் அடர்ந்து வளர்ந்து இருந்த ஒரு பெரிய திராட்சைக் கொடியின் பின்னால் சென்று மறைந்து கொண்டது. மானைத் துரத்திக் கொண்டு வந்த வேடர்களின் கண்களில் மான் தென்படவில்லை. வேடர்கள் மானைத் தேடிக் கொண்டு தோட்டத்தின் உள்ளேயே சுற்றிச் சுற்றி வந்தார்கள். வேடர்கள் சென்றுவிட்டார்கள் என்று நினைத்த மான், நிம்மதி அடைந்தது.

மானின் கண்களில் பசுமையான திராட்சை இலைகள் பட்டன. தான் மறைந்திருக்க உதவிய அந்த இலைகளை அது எண்ணிப் பார்க்கவில்லை. தனக்குப் பாதுகாப்பு அளித்த திராட்சை இலைகளின் மீது அதற்குக் கொஞ்சமும் நன்றி உணர்ச்சி ஏற்படவில்லை. அந்தத் திராட்சைக் கொடியின் இலைகளைத் தின்ற ஆரம்பித்தது. சிறிது நேரத்தில் இலைகள் அனைத்தையும் மான் தின்றுவிட்டது. இப்பொழுது அந்த இடத்தில் இலையில்லாத கொடிதான் மிஞ்சியது.

மான் நின்றிருந்த இடத்தில் இப்போது மறைப்பு இல்லாததால் அது நிற்பது வேடர்களின் பார்வையில் பட்டது. உடனே வேடர்கள் அம்பை எய்து மானைக் கொன்றுவிட்டார்கள். இறந்த மானை இழுத்துக் கொண்டு தோட்டத்தை விட்டு வெளியே சென்று விட்டார்கள்.

தனக்குப் பாதுகாப்பு அளித்த திராட்சைக் கொடிக்கு, நன்றி இல்லாத அந்த மான் துரோகம் இழைத்தது. அதனால்தான் அது வேடர்களின் பார்வையில் பட்டு தன் உயிரை இழந்தது.